கோயம்புத்தூர் விற்பனைக்குழு முதுநிலை செயலாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு.இரா.பாலசந்திரன் பி.ஏ.,

ந.க.எண்: ஆ1/762/2019 நாள்: 30.09.2021

| | |
|---|---|
| பொருள்: | பணிக்குழு- கோயம்புத்தூர் விற்பனைக் குழு - இளநிலை உதவியாளர் திரு.G.சதாசிவம் - இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக |
| பார்வை: | 1)அரசாணைஎண்: 978 வேளாண்மை(AM-III) துறை நாள்:23.05.1985.<br>2)தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களது கடித எண்: 1172/PSD-H1/2019.நாள்:18.02.2019.<br>3)இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்:ஆ1/762/2019, நாள்:01.03.2019. |

உத்தரவு:-

பார்வை(1)ல் காணும் அரசாணையின்படி, விற்பனைக்குழுவில் உள்ள இளநிலை உதவியாளர் பதவிகள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் தெரிவுக்குட்படுத்தப்பட்டும், அவ்வாறு பணியமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் பதவிக்கு சம்மந்தப்பட்ட விற்பனைக்குழுவின் செயலாளர் பணிநியமன அலுவலர் என்றும் அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை(2)ல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு திரு.G.சதாசிவம் தெரிவு செய்யப்பட்டு கோயம்புத்தூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(3)ல் காணும் இவ்வலுவலக உத்தரவின்படி தனியர் கோயம்புத்தூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டார். அதனடிப்படையில் தனியர் செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இளநிலை உதவியாளராக 01.03.2019 முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 01.03.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்தும் தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு, வேளாண்மை விற்பனைத்துறை பணியாளர்களுக்கான துறைத் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என நிபந்தனை விதித்து தெரிவிக்கப்படுகிறது.

//தபிபா//

இந்த பணி வரன்முறை உத்தரவு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble Hight Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination-IV for the year 2018-2019 and 2019-2020."

இந்த உத்தரவினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை 2வது நகலில் தேதியுடன் கூடிய கையொப்பமிட்டு மீள அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது.

முதுநிலை செயலாளர்,
கோயம்புத்தூர் விற்பனைக்குழு,
கோயம்புத்தூர்

பெறுநர்:

திரு.G.சதாசிவம்
இளநிலை உதவியாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் செஞ்சேரி (உரிய வழிமுறையில்)

30/9/2021

நகல்:

1)அ4-பிரிவு
2)இருப்புக்கோப்பு
3)பணிப்பதிவேடு.

அ.தி.மு - 110/21

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
செஞ்சேரி. நாள்-5.10.21

இந்நகல் அனுப்பப்படுகிறது.

பெறுநர்

கோ.சதாசிவம்
இளநிலை உதவியாளர்
கோயம்புத்தூர் விற்பனைக்குழு
கோயம்புத்தூர் - 45.

5.10.21

மேற்பார்வையாளர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை
கோயமுத்தூர் விற்பனைக் குழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
செஞ்சேரி-641669